# உடன்பிறப்பே... 95

**நீரை.மகேந்திரன்**

**தி.மு.கழக வரலாற்றில் இடம் பிடித்த தீரர்களை வாராவாரம் இங்கு நினைவுகூர்ந்து வருகிறோம். அந்த வகையில், பெரியாரின் தொண்டராக, அண்ணாவின் தம்பியாக, கலைஞரின் உடன்பிறப்பாகப் பயணித்து, கழகம் வளர்த்த ஏ.கே.ஜெகதீசன் அவர்களின் வரலாற்றினைப் பார்க்கலாம்.**

ஓவியம் : ரவி பேலட்



## ஏ.கே.ஜெகதீசன்

# கலைஞரின் வரலாற்றில் தனித்த ஓர் இடம்!

2001-ஆம் ஆண்டு, ஜூன் மாதம் 30-ஆம் தேதி, இந்திய அரசியல் அரங்கே அதிர்ச்சி அடைந்த நாள் எனலாம். நான்கு முறை தமிழ்நாடு முதல்வராக இருந்த முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களை, துணைக் கண்ட அளவில் மூத்த அரசியல்வாதியை, காழ்ப்புணர்ச்சி காரணமாக, நள்ளிரவில் முறைகேடான வகையில் கைது செய்தார் அம்மையார் ஜெயலலிதா. ஒன்றிய அமைச்சர்களாக இருந்த முரசொலி மாறன், டி.ஆர்.பாலு உள்பட ஒன்றிய அமைச்சரவையே கலைஞரின் கைதைக் கண்டித்து களத்துக்கு வந்தது. கழக உடன்பிறப்புகள் அத்தனைபேரின் உயிரும், உடலும் ஒட்டுமொத்தமாக சென்னை மத்திய சிறையை நோக்கியே இருந்தன. அவர்கள் அத்தனைபேரும் சிறைவாசலுக்கு வெளியேதான் நின்றனர். ஆனால், அன்று கலைஞருடன் கைது செய்யப்பட்டு உள்ளே இருந்தார் ஓர் உடன்பிறப்பு. அவர் ஏ.கே.ஜெகதீசன். அன்றைக்கு மாநகராட்சி மன்ற உறுப்பினராக இருந்தவர்.

அன்றைக்கு அவர் மாமன்ற உறுப்பினராக இருந்திருக்கலாம். ஆனால் அவர், முத்தமிழறிஞர் கலைஞரின் நெடுநாள் நண்பர் என்பதே அவருக்கான முதன்மை அடையாளம். கலைஞர் முதன்முதலில் எழுதிய **‘சாந்தா அல்லது பழனியப்பன்’** நாடகத்தில், முக்கிய பாத்திரமான பழனியப்பன் வேடமேற்று நடித்தவர். இவரது நடிப்பினைப் பார்த்து பேரறிஞர் அண்ணாவே பலமுறை பாராட்டி இருக்கிறார் எனப் பெருமையுடன் நினைவுகூர்ந்துள்ளார் ஜெகதீசன்.

### பயமறியா இளங்கன்று

அன்றைய ஒருங்கிணைந்த வேலூர் மாவட்டம், ஆற்காடு நகரத்தில் ஏ.கண்ணப்பா - தேசாவதி ஆகியோரின் மூத்த மகனாக 1930 ஆம் ஆண்டு மார்ச் 11-ஆம் தேதி பிறந்தவர் ஜெகதீசன். தன்னுடைய மாணவப் பருவத்திலேயே, ஆற்காட்டில் திராவிட இயக்கக் கொள்கைகளால் ஈர்க்கப்பட்டவர். கழகம் தொடங்கிய காலத்திலேயே தன்னை ஐக்கியப்படுத்திக் கொண்டவர்.

ஆற்காட்டில், சி.வி.எம்.அண்ணாமலை, இராம அரங்கண்ணல், தில்லை வில்லாளன் ஆகியோர் உரையாற்றிய ஒரு பொதுக்கூட்டத்தில் கலந்துகொண்டு, அந்த மேடையிலேயே கழகத்தில் தன்னை இணைத்துக் கொண்டவர் ஏ.கே.ஜெகதீசன்.

கழகம் தொடங்கிய காலம்தொட்டே, தலைமைக் கழகம் அறிவிக்கும் போராட்டங்களை அவர் ஒருங்கிணைக்கும்விதம் கவனம் ஈர்ப்பதாக இருக்கும். 1950-ஆம் ஆண்டில் ‘வகுப்புவாரி உரிமை ஆணை’ ரத்து செய்யப்பட்டபோது, மாணவர்களைத் திரட்டிக் கொண்டு ஆற்காடு நகரம் முழுவதிலும் செம்மண்ணால் `WE WANT COMMUNAL G.O’ என்று ஆங்கிலத்தில் எழுதிப் பரபரப்பூட்டினார்.

அதே ஆண்டில், ஆற்காடு பாலாற்றங்கரையில் நடைபெற்ற ஒரு கூட்டத்தில் ‘விபூதி’ வீரமுத்து என்னும் காங்கிரஸ் பேச்சாளர், தந்தை பெரியாரையும் - பேரறிஞர் அண்ணாவையும் இழிவுபடுத்திப் பேசியபோது, மேடையை நோக்கி தனது கண்டனக் குரலைத் தனி ஆளாக எழுப்பி இருக்கிறார். காவல்துறையினர் இவரைக் கைது செய்த நிலையில், தகவல் அறிந்து கழகத் தோழர்கள் பெருவாரியாகக் கூடி, கண்டனத்தைப் பதிவு செய்து அந்தக் கூட்டத்தை நடத்தவிடாமல் தடுத்துள்ளனர். அன்றைக்கு ஆற்காடு நகரக் கழகச் செயலாளர் பொன்னம்பலம் மற்றும் திராவிடர் கழகத் தலைவர் இளங்குப்பன் உள்பட பல தோழர்கள் இவரைக் காவல் நிலையத்திலிருந்து மீட்டுள்ளனர்.

1952-ஆம் ஆண்டில், வாலாஜா நகருக்கு வருகை தந்த ஆளுநர் பிரகாசாவுக்குத் தனி ஆளாக நின்று கறுப்புக்கொடி காட்டி கைதானவர் ஜெகதீசன். 1953-ஆம் ஆண்டு, ‘குலக் கல்வித் திட்டத்தை’ எதிர்த்து, என்.எஸ்.இளங்கோ தலைமையில், முதலமைச்சர் ராஜாஜி வீட்டின் முன் நடைபெற்ற மறியல் போராட்டத்தில் கலந்துகொண்டு கைதானார்.

1963-ஆம் ஆண்டு இந்தி எதிர்ப்புப் போராட்டத்தின்போது வாலாஜா ரயில் நிலையத்தில் இந்தி எழுத்துக்களைத் தார்பூசி அழித்தபோது கைது செய்யப்பட்டார். 1965-ஆம் ஆண்டு, இந்தி எதிர்ப்பின் உச்சக்கட்டமான குடியரசு நாளைத் துக்கநாளாகப் பேரறிஞர் அண்ணா அறிவித்து, கழகத்தினர் ஒவ்வொருவர் வீட்டிலும் கறுப்புக் கொடி ஏற்ற ஆணையிட்டார். அந்த ஆணையை, மக்கள் தமிழ்நாடு முழுவதும் நிறைவேற்றினர். ஜெகதீசனும் தனது வீட்டில் கறுப்புக் கொடி ஏற்றினார். அப்போது, அனைத்து ஊர்களிலும் மொழிப்போராட்டத்தின் பதற்றமான சூழல் நிலவியபோது, அந்த வாய்ப்பைப் பயன்படுத்தி ஒரு கும்பல் ஜெகதீசனைக் கடுமையாகத் தாக்கியது. அப்போது அவருடைய ஒரே மதிப்புமிக்க சொத்தாக இருந்த மிதிவண்டியையும் உடைத்துச் சென்றனர்.

> **“பேரறிஞர் அண்ணாவிடம் நற்பெயர் பெற்று, ‘கழகமே கொள்கை, கலைஞரே தலைவர்’ என வாழ்ந்த ஜெகதீசன் ‘இளையவர்களுக்கு அரசியல் பயிற்றுவிப்பதிலும் முன்னோடி’ எனப் பெயர் பெற்றவர்”**

### மிசா உற்றத் துணை

1970-ஆம் ஆண்டுகளில் ஆற்காட்டில் இருந்து சென்னைக்குக் குடிபெயர்ந்தவர், நெருக்கடிநிலை காலத்தில் கலைஞருக்குப் பல விதங்களில் உதவிய உடன்பிறப்பாக அறியப்பட்டவர். தினமும் மாலை நேரத்தில் கடற்கரைக்கு வரும் தலைவர் கலைஞருக்குப் பக்கபலமாக உதவிப் பணிகளைச் செய்தவர்களில் ஜெகதீசனும் ஒருவர். அதன் காரணமாகக் காவல்துறை இவரைக் கைதுசெய்து கொடுந்தாக்குதலை நடத்தி இருக்கிறது.

ஜெகதீசன் இல்லத்தில் நடைபெற்ற ஒரு நிகழ்ச்சியில் பேசிய தலைவர் கலைஞர், மிசா காலத்தில் ஜெகதீசன் அவர்களின் பணிவிடைகளைக் குறிப்பிட்டு, “என் உயிர் உள்ளவரை ஜெகதீசன் அன்று செய்த பணியை மறக்க மாட்டேன்” என்றார். எந்த எதிர்பார்ப்பும் இல்லாமல் பணியாற்ற கழகம் இருக்கிறது என இயங்கிக் கொண்டிருந்த ஜெகதீசன், 1996-ஆம் ஆண்டு, இன்றைய முதல்வர் அவர்கள் சென்னை மேயராகப் பொறுப்பேற்றபோது மாநகராட்சி உறுப்பினராக கழகத்தின் சார்பில் வெற்றிபெற்றுச் சென்றார். 2006 வரை சென்னை மாநகராட்சி மன்ற உறுப்பினராகப் பணியாற்றினார். அப்போது மாநகராட்சிப் பணிக்குழுத் தலைவராகவும், மன்றக் கொறடாவாகவும் பொறுப்பு வகித்துள்ளார்.

கலைஞர் முதலமைச்சராக, இன்றைய தலைவர் அவர்கள் சென்னை மாநகராட்சி மேயராக இருந்து, சென்னை நகருக்குள் போக்குவரத்து நெருக்கடிகளுக்குத் தீர்வு காணும் வகையில், பல மேம்பாலங்களை உருவாக்கினர். அப்போது மாநகராட்சிப் பணிக்குழுத் தலைவராக இருந்தவர் ஜெகதீசன். அதனால்தான், அன்று கலைஞருடன் சிறைக்குச் செல்லும் வரலாற்றுச் சிறப்புமிக்க வாய்ப்பினைப் பெற்றார்.

பேரறிஞர் அண்ணாவிடம் நற்பெயர் பெற்று, ‘கழகமே கொள்கை, கலைஞரே தலைவர்’ என வாழ்ந்த ஜெகதீசன் ‘இளையவர்களுக்கு அரசியல் பயிற்றுவிப்பதிலும் முன்னோடி’ எனப் பெயர் பெற்றவர். வயதுமூப்பு காரணமாக, 2010-க்குப் பின்னர் தீவிர அரசியல் பணிகளில் இருந்து ஒதுங்கி இருந்தார். ஆனால், அவரது சிறப்புக்குரிய பணியினைக் கழகம் என்றைக்கும் மறக்காது என்கிற வகையில், முத்தமிழறிஞர் மறைந்த அடுத்த ஆண்டில் திருவண்ணாமலையில் நடைபெற்ற கழக முப்பெரும் விழாவில், கலைஞர் அரங்கில் **‘கலைஞர் விருது’** வழங்கிச் சிறப்பிக்கப்பட்டார்.

2020-ஆம் ஆண்டு கொரோனா பெருந்தொற்று காலத்தில் கழகத்தின் பல மூத்த முன்னோடிகள் உடல்நலக்குறைவு காரணமாக பிரிவு எய்தினர். அந்தப் பட்டியலில் ஜெகதீசனும் இடம்பெற்றார். பாதுகாப்பு நெறிமுறைகளோடு அவரது உடலுக்கு இறுதி மரியாதை செலுத்தினார் இன்றைய கழகத் தலைவர்.

நெருக்கடி நிலை காலத்தில் கலைஞருடன் நின்றவருக்கு, எத்தனை நெருக்கடி என்றாலும் நேரில் சென்று இறுதி மரியாதை செலுத்தி, கலைஞரின் நண்பருக்கு விடை கொடுத்தனர் கழகத்தினர். அவரது நினைவுகளும், வரலாறும் என்றென்றைக்கும் உடன்பிறப்புகளோடு நிற்கும்.

**...துடிக்கும்**

## மாணவர்கள், ஆய்வாளர்கள் கவனத்திற்கு!

பெரியார் குறித்த விவாதங்கள் தீவிரமாக இருக்கும் இந்தக் காலகட்டத்தில், பெரியாரை ஆய்வுநோக்கில் உற்றுநோக்கும் ஒரு வாய்ப்பைப் பெரியார் பல்கலைக்கழகம் உருவாக்கியிருக்கிறது.

பெரியார் பல்கலைக்கழகத்தில், தந்தை பெரியார் ‘ஈ.வெ.இராமசாமி இருக்கை’, ‘பேரறிஞர் அண்ணா இருக்கை’, ‘முத்தமிழறிஞர் தமிழவேள் கலைஞர் மு.கருணாநிதி ஆய்வு’ மையம் ஆகியவற்றின் சார்பில், ‘திராவிட இலக்கியம் - இதழியல்’ என்ற தலைப்பில், தேசிய அளவிலான இரண்டு நாள் கருத்தரங்கம் மார்ச் மாத இறுதியில் நடைபெறவுள்ளது. இதற்காக ஆய்வறிஞர்கள், பேராசிரியர்கள், ஆய்வாளர்கள், ஆர்வலர்கள் மற்றும் முதுநிலை மாணவர்களிடமிருந்து திராவிட மானுடவியல், திராவிடத் திரைக்கலை, திராவிட இலக்கியக்கலை, திராவிடப் பேச்சுக்கலை, திராவிட நாடகக்கலை, திராவிட இதழியல் உள்ளிட்ட 20 பொருண்மைகளில் ஆய்வுக் கட்டுரைகள் வரவேற்கப்பட்டுள்ளன.

விருப்பமுள்ளவர்கள் பிப்ரவரி 10-ஆம் தேதிக்குள் ஆய்வுச் சுருக்கத்தையும், பிப்ரவரி 28-ஆம் தேதிக்குள் முழு கட்டுரையையும் kalaignarresearch@periyaruniversity.ac.in என்ற இ-மெயில் முகவரிக்கு அனுப்ப வேண்டும்.

கருத்தரங்கப் பதிவுக் கட்டணமாக ஆய்வறிஞர்கள் மற்றும் பேராசிரியர்களுக்கு ரூ.1,500, ஆய்வாளர்கள் மற்றும் ஆர்வலர்களுக்கு ரூ.1,000, முதுநிலை மாணவர்களுக்கு ரூ.500 நிர்ணயிக்கப்பட்டுள்ளது. கருத்தரங்கில், வாசிக்கத் தேர்ந்தெடுக்கப்படும் கட்டுரைகள் குறித்த தகவல்கள் 05.03.2025-க்குள் தெரிவிக்கப்படவுள்ளன. 2025 மார்ச் நான்காவது வாரத்தில் நடைபெறவுள்ள கருத்தரங்கிற்கான தேதி, பின்னர் அறிவிக்கப்படும் என்று பெரியார் பல்கலைக்கழகம் தெரிவித்துள்ளது.

மேலதிக விவரங்களுக்கு முனைவர் இரா.சுப்பிரமணி, கௌரவ விரிவுரையாளர் முனைவர் இரா.சிலம்பரசன் ஆகியோரைத் தொடர்புகொள்ளலாம்.

## ஃப்ளாஷ்பேக்



### பேராசிரியரிடம் நான் வரைந்த ஓவியம்!



எ.பாலசந்தர்

1999-ஆம் ஆண்டு பண்ருட்டி அரசு ஆண்கள் மேல்நிலைப் பள்ளிக் கட்டடத் திறப்பு விழாவிற்கு வருகை தந்தார் அன்றைய கல்வித்துறை அமைச்சர் மாண்புமிகு பேராசிரியர் அவர்கள். அப்போது, நான் அங்கு பன்னிரண்டாம் வகுப்பு படித்துக் கொண்டிருந்தேன். நான் வரைந்த ஓவியம் ஒன்றை பேராசிரியரிடம் அளித்து வாழ்த்துப் பெற்றேன். விழா மேடையில், மாண்புமிகு அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம் அவர்கள், நெல்லிக்குப்பம் சட்டமன்ற உறுப்பினர் எ.மணி அவர்கள், பள்ளித் தலைமை ஆசிரியர் மற்றும் ஆசிரியப் பெருமக்கள், பள்ளி மாணவர்கள் என அனைவரும் இடம்பெற்றிருந்தனர். பள்ளிநாட்களில் மறக்க முடியாத நினைவு இது.

**- எ.பாலசந்தர்,**
**மாணவர் அணி முன்னாள் துணை அமைப்பாளர்,**
**கடலூர் மேற்கு.**

இது போன்ற அரிய புகைப்படங்களை சிறுகுறிப்புடன் எங்களுக்கு அனுப்புங்கள். அலைபேசி எண் அவசியம்.
அனுப்ப வேண்டிய முகவரி: அன்பகம், 614, அண்ணா சாலை, தேனாம்பேட்டை, சென்னை - 600 018. வாட்ஸ்அப் எண் : 90033-24473
மின்னஞ்சல்: youthwing@dmk.in

## கருவூலம்


### அலகாபாத்தில் கலைஞர்!

14.10.1973 அன்று உத்தரப் பிரதேச மாநிலம் அலகாபாத்தில் நடைபெற்ற தாழ்த்தப்பட்டோர், பிற்படுத்தப்பட்டோர் மாநாட்டை முத்தமிழறிஞர் கலைஞர் தொடங்கி வைத்தார். அன்று மாலை அங்குள்ள புருஷோத்தமதாஸ் தாண்டன் மைதானத்தில் நடைபெற்ற மாபெரும் பொதுக்கூட்டத்திலும் உரையாற்றினார். அன்றைக்கு, ‘இராமனின் விரோதி கலைஞர்’ என அலகாபாத்தில் சுவரொட்டி விளம்பரங்கள் செய்தன இந்துத்துவ அமைப்புகள். ராஜ்நாராயணன் கேட்டுக்கொண்டதற்கு இணங்க, அவ்விமர்சனத்திற்கு விரிவான பதில் அளித்தார் கலைஞர்.

## திராவிடத்தால் வாழ்கிறோம்

736

எழுத்து:
கோவி.லெனின்
ஓவியம்:
கி.சொக்கலிங்கம்




-வாழ்வோம்

Published and Printed by Karthikeyan Shanmugasundaram On behalf of Murasoli Trust at Murasoli Achagam, No:180, Kodambakkam High Road, Chennai - 600 034 Editor : Karthikeyan Shanmugasundaram Regn. No.7436, TN/CH (C) 261/24 - 26 RNI No.1244/57 WPP.No.TN/P.M.G. (CCR) W.P.P. 355/24-26. Phone : 28179191, 28179131